**24.02.2026.**

**Spl.C.C.No.20 of 2025** (Spl.C.C.No. 1 of 2018 - CJM, Vellore)

P.W. 1 - மஞ்சுளா த/பெ.பொன்னுசாமி

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பவ சமயத்தில் நான் டெய்லர் வேலை செய்து வந்தேன். போலீசாரிடம் டெய்லர் வேலை செய்வதாகத்தான் சொன்னேன் அவர்கள் அதை எழுதிக்கொண்டார்களா என்று தெரியாது. என் மகளுக்கு திருமணம் செய்தபோது நான் டெய்லர் வேலைதான் செய்து வந்தேன். நான் டெய்லர் வேலை செய்யவில்லை என்றும் நான் குடியாத்தம் வழக்கறிஞர்கள் சங்கத்தில் மாதம் ரூ.12,000/- சம்பளத்திற்கு வேலை செய்தேன் என்றால் PWD மூலமாக என்னை வழக்கறிஞர்கள் சங்கத்தில் துப்புரவு பணியாளராக வேலை செய்தேன் எனக்கு அவ்வளவு சம்பளம் இல்லை.

நான் வழக்கறிஞர்கள் சங்கத்தில் வேலை செய்து மாதம் ரூ.12,000/- சம்பாதித்தேன் என்றும் அந்த உண்மையை மறைத்து பொய்யாக மனு கொடுத்துள்ளேன் என்றும் வருமான சான்றிதழும் சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. வருமான சான்றிதழ் கொடுத்தவர் Verification செய்துதான் வருமான சான்று கொடுத்தார். என்ன Verification செய்தார் என்றால் நான் என்ன வேலை செய்கிறேன் என்ன வருமானம் என்று விசாரித்தார்கள்.

என்றைய தேதியிலிருந்து நான் கணவரால் கைவிடப்பட்டவர் என்றால் நான் தாலுக்கா அலுவலகத்திலிருந்து சான்று வாங்கி வைத்துள்ளேன். அந்த சான்றை போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் நினைவில்லை. இந்த வழக்கின் புகார் கொடுப்பதற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு கணவனால் கைவிடப்பட்டவர் என்று சான்று பெற்றேன் என்றால் 1998-ம் ஆண்டு. குடும்ப அட்டையில் என் கணவர் பெயர் அப்படி இருந்தால் இருக்கக்கூடாது என்றால் என் கணவர் பெயரை குடும்ப அட்டையிலிருந்து நீக்கிவிட்டார்கள்.

என் மகளின் திருமணம் 2016ம் ஆண்டு நடைபெறும் வரை குடும்ப அட்டையில் என் கணவர் பெயர் இருந்தது என்றும் அந்த பெயரும் சேர்ந்துதான் ரேஷன் பொருட்கள் வாங்கினேன் என்றால் ஆமாம் அதன் பின்னர் விசாரணை செய்து என் கணவர் என்னுடன் இல்லை என்று தெரிந்து பெயரை நீக்கிவிட்டார்கள். போலீசாரிடம் கொடுத்த குடும்ப அட்டையில் என் கணவர் பெயரும் உள்ளது என்றால் சரிதான்.

கணவரால் கைவிடப்பட்டவர் என்று அரசாங்கத்திடமிருந்து அதன் பலன் எனக்கு கிடைத்ததா என்றால் கொஞ்சம் காலம் மாதம் ரூ.180 கொடுத்தார்கள் அதன் பின்னர் வரவில்லை. கணவரால் கைவிடப்படடவர் என்று சான்று கொடுத்த பின்னர் கொஞ்ச காலம் கொடுத்தார்கள் அதன் பின்னர் இல்லை.

எனக்கு எழுத படிக்க தெரியும். 10 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமாக எத்தனை கையொப்பங்கள் செய்திருப்பேன் என்றால் தோராயமாக ஐந்து போட்டிருப்பேன். நான் கையொப்பமிட்ட அனைத்து ஆவணங்களிலும் முழு பெயர் எழுத மாட்டேன் PM என்று எழுதுவேன் ஒரு சில நேரங்களில் முழு பெயரையும் எழுதுவேன். Vigilance போலிசாரிடம் அந்த நேரத்தில் மன நிலை எப்படி இருந்ததோ PM என்றும் ஒரு சில நேரத்தில் முழு பெயரையும் கையொப்பமாக போட்டிருப்பேன்.

புகாரை Vigilance அலுவலகத்தில் மேஜையில் வைத்து நானேதான் எழுதினேன். புகார் தோராயமாக எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டது என்றால் பார்த்தால் சொல்ல முடியும். சாட்சி புகாரை பார்த்துவிட்டு புகார் இரண்டு பக்கங்கள் என்று சாட்சியம் அளிக்கிறார். சம்பவத்தின்போது என் மகள் வேலூரில் எங்கிருந்தார் என்றால் தொரப்பாடியில் இருந்தார். தொரப்பாடியில் என் மகள் இருந்த இடத்திற்கும் Vigilance அலுவலகத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றால் தெரியாது. Vigilance அலுவலகத்திற்கும் ஆஜர் எதிரி வேலை செய்த இடத்திற்கும் எவ்வளவு தொலைவு என்றும் பேருந்து கட்டணம் எவ்ளவு என்றால் குடியாத்தம் டூ வேலூர் அந்த சமயத்தில் ரூ.14 பேருந்து கட்டணம் ஆகும். எதிரியின் போன் நம்பர் தெரியுமா என்றால் வேறு ஒரு போனில் அவரின் போன் நம்பர் வைத்திருந்தேன் அந்த போன் தற்போது என்னிடம் இல்லை அதனால் எண் தெரியாது.

இந்த வழக்கு சம்பந்தமாக Vigilance போலிசாரை பார்த்தபோது எதிரியின் போன் நம்பர் கொடுத்தேனா என்றால் அவர் நம்பர் கொடுக்கவில்லை என் நம்பர்தான் கொடுத்தேன். உண்மையில் எதிரி பணம் கேட்டிருந்தால் எதிரியின் போன் நம்பர் Vigilance போலீசாரிடம் கொடுத்திருப்பேன் என்றும் அவ்வாறு கேட்காததால்தான் போன் நம்பர் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனு தாலுக்கா அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையம் மூலமாகத்தான் கொடுத்ததாக ஞாபகம்.

பதிவு செய்த விண்ணப்பத்தில் குளறுபடிகள் இருந்ததல்தான் அந்த விண்ணப்பம் எனக்கு திருப்பப்பட்டது என்றால் திருப்பவில்லை Verification க்காக மனு செய்த 10-20 நாட்கள் கழித்து என் வீட்டிற்கு எதிரியும் வேறு ஒருவரும் வந்தார்கள். Verification ன்போது என் வீட்டிற்கு வந்து விசாரித்தவர்கள் நான் கொடுத்த சான்றிதழ்கள் சரியாக இல்லைஎன்றும் என் மகள் படித்த பள்ளியில் தலைமை ஆசிரியரிடமிருந்து அனைத்து ஆவணங்களிலும் கையொப்பம் வாங்கிக்கொண்டு வந்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள் என்றால் இல்லை அனைத்து ஆவணங்களும் சரியாக இருந்தது.

Vigilance போலீசார் என்னிடம் எந்த கருவியை கொடுத்து பதிவு செய்யச்சொன்னதாக சொல்லும் நான் அது என்ன கருவி என்றால் Vigilance போலீசார் வைத்திருந்த சிறிய போன் கொடுத்து Record செய்ய சொன்னார்கள் அந்த கருவி மூலம் பேச முடியுமா என்றால் அதில் பேச முடியுமா இல்லையா என்று எனக்கு தெரியாது ஆனால் அந்த

கருவியை கொடுத்து Record செய்து வரச்சொன்னார்கள். அந்த கருவி என்ன கம்பனி என்றால் எனக்கு தெரியாது. அதற்குள் கேசட் இருந்ததா என்றால் தெரியாது ஆனால் சின்ன போன் ஆகும். அதற்குள் மெமரி கார்டு இருந்ததா என்றால் இருந்திருக்கும் அது இருந்தால்தான் ரெக்கார்டு ஆகும். அந்த கருவியை தோராயமாக எவ்வளவு நேரம் ஆன் செய்து வைத்திருந்தேன் என்றால் அரை மணி நேரம் இருக்கும்.

எனக்கும் எதிரிக்கும் இடையே சுமார் அரை மணி நேரம் வாக்குவாதம் நடந்தது. அந்த கருவியை நானே ஆபரேட் செய்து ஆன் செய்தேனா என்றால் ஆமாம். எனக்கும் எதிரிக்கும் விரோதமா என்றால் எந்த விரோதமும் இல்லை அவர் பணம் கேட்டதால்தான் விரோதம். எனக்கு முன்னர் எத்தனை பேர் மனு போட்டுள்ளார்கள் என்ற விவரத்தை Vigilance போலிசார் சொன்னார்களா என்றால் எல்லாரிடமும் ரூபாய் ஐந்தாயிரம் வாங்கியிருக்கிறேன் அவ்வாறு ஒரு லட்சம் வரை வாங்கியிருக்கிறேன் இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க கஷ்டப்படுகிறாயே என்று ஆஜர் எதிரியே என்னிடம் சொன்னார். ஆஜர் எதிரியின் இயல்பான பணி என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் திருமண உதவி தொகையை எதிரிதான் Sanction செய்து கொடுப்பவர் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் மனு கொடுப்பதற்கு முன்பு 30-40 மனுக்கள் நிலுவையில் இருந்தது என்றால் சாட்சி ஆமாம் என்று தலையாட்டிவிட்டு மீண்டும் எனக்கு தெரியாது என்று சாட்சியம்

அளிக்கிறார். வீட்டை அடமானம் வைத்து என் மகள் திருமணம் செய்து வைத்தேன் என்றால் குடியாத்தம் குமரன் பைனான்ஸில் பத்திரத்தை அடமானம் வைத்து பணம் பெற்று திருமணம் செய்து வைத்தேன். அந்த ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. எத்தனை சதவீதத்திற்கு அடமானம் வைத்தேன் என்றால் 1,50,000/-க்கு வைத்தேன். மனு கால தாமதம் ஆகின்றது என்று ஆஜர் எதிரியை வற்புறுத்தி திட்டினேன் என்றும் பல மனுக்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த நிலையில் என் மனுவிற்கு முன் உரிமை கொடுத்து அந்த பணத்தை பெற்று நான் வாங்கிய கடனுக்கு அசல் செலுத்த எதிரியை நான் வற்புறுத்தினேன் என்றும் அதற்கு எதிரி மறுக்கவே எதிரி மீது பொய் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியின் மேல் அதிகாரியிடம் எதிரி பணம் கேட்டதாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

நகையை அடமானம் வைத்து ஆஜர் எதிரிக்கு பணம் கொடுத்தாக சொல்லும் நிலையில் அந்த நகை கடையின் உரிமையாளர் என் தெருவில் வசிப்பவர் என்றால் சரியல்ல என் மகளின் நகை வாங்கிக்கொண்டு போய் விருப்பாச்சிபுரத்தில் சேட்டுக்கடையில் அடகு வைத்தேன். அந்த நகை கடை உரிமையாளர் எனக்கு நெருங்கிய நண்பர் என்றும் அதனால் நகை அடமானம் வைக்காமலேயே அடமானம் வைத்ததாக ரசீது அவர் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புகாரை தோராயமாக எவ்வளவு நேரம் எழுதினேன் என்றால் சுமார் கால்

மணி நேரம் எழுதினேன். கருவியை எடுத்துக்கொண்டு போனதாக சொல்லும் பர்சை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்துவிட்டேன். அந்த பர்சில்தான் ஆஜர் எதிரிக்கு கொடுக்க வேண்டிய பணத்தையும் எடுத்து சென்றேனா என்றால் இல்லை முதலில் எதிரி பேசியதை ரெக்கார்டு செய்து கொடுத்த பின்னர்தான் புகார் கொடுத்த பின்னர் அடகு வைத்து பணம் பெற்று அந்த பணத்தை எடுத்து சென்றேன்.

எதிரியிடம் Vigilance அலுவலகத்திலிருந்து பணத்தை கொடுப்பதற்காக பணத்தை பர்சில்தான் எடுத்துக்கொண்டு போனேன். அந்த பர்சை போலீசார் வாங்கிக்கொண்டார்களா என்றால் இல்லை. ஆஜர் எதிரி அவரின் அலுவலகத்தில் வைத்து பணம் கொண்டு வந்தாயா என்று கேட்டபோது என்னிடம் ரூ.1500/-தான் கொண்டு வந்துள்ளேன் என்று எடுத்து கொடுத்ததாக Vigilance போலீசாரிடம் சொன்னேனா என்றால் அவர் கேட்டது ரூ.2000/- நான் எடுத்து சென்றது ரூ.1500/- அதை எதிரியிடம் கொடுத்தேன்.

எந்த வாகனத்தில் எதிரியின் அலுவலகத்திற்கு போனோம் என்றால் அவர்கள் துறை வாகனத்தில் சென்றோம். எத்தனை வாகனத்தில் எத்தனை பேர் சென்றோம் என்றால் இரண்டு பேர் வேறு துறையை சேர்ந்தவர்கள் மற்ற 4 நபர்கள் Vigilance-ஐ சேர்ந்தவர்கள் மற்றும் நான் ஒருவர் ஆகியோர் வாகனத்தில் சென்றோம். தோராயமாக எவ்வளவு நேரத்தில் போய் சேர்ந்தோம் என்றால் சுமார் ஒரு மணி நேரம்

ஆனது. ஆனால் அதை என்னால் சரியாக சொல்ல முடியவில்லை. பிடிஓ அலுவலகம் குடியாத்தம் டூ காட்பாடி ரோட்டில் உள்ளது. அலுவலக நுழைவு வாயில் எந்த திசையை பார்த்தவாறு உள்ளது என்றால் வடக்கு திசை. மெயின் ரோட்டிலிருந்து ஆஜர் எதிரியின் இருக்கை இருந்த இடம் 60-70 அடி இருக்கும். மெயின் ரோட்டிலிருந்து எதிரியின் இருக்கையை நேரடியாக பார்க்க முடியாது. ஆஜர் எதிரி அமர்ந்திருந்த இருக்கை எந்த திசையை பார்த்திருந்தது என்றால் கிழக்கு திசையை பார்த்து இருந்தது.

ஆஜர் எதிரியின் இருக்கைக்கு அருகில் 6-7 டேபிள்களுடன் இருக்கைகள் இருந்தது என்றால் இருந்தது. எதிரி அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகில் பிடிஓவின் அறை தனியாக உள்ளது என்றால் சரிதான். அன்றைக்கு அந்த அறையில் ஆள் நடமாட்டத்துடன் அனைவரும் அவர்கள் அவர்கள் இருக்கையில் வேலை செய்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சம்பவம் நடந்தது ஞாயிற்றுக்கிழமை அன்று யாரும் இல்லை ஆஜர் எதிரி மட்டும் இருந்தார்.

நான் சொல்வதுபோல் 10ம் தேதி அலுவலகத்தில் எதிரி இல்லை என்றால் 9ம் தேதி அலுவலகத்திற்கு வரச்சொன்னார் ஆனால் அன்று அவர் இல்லை ஆனால் 10ம் தேதி அவர் அலுவலகத்தில் இருந்தார். எதிரி எந்த ஊருக்கு நிரந்தரமாக வேலை பார்த்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

சம்பவத்திற்கு முன்னர் ஆஜர் எதிரி எத்தனை மாதங்களுக்கு முன்பு அந்த இருக்கைக்கு வேலைக்கு வந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் கொடுத்த மனு மீது திங்கள், வெள்ளி, சனி, புதன் ஆகிய நாட்களில்தான் எதிரியை பார்த்தேன் என்றால் அவர் சொன்ன தேதிகளில் அவரை பார்த்தேன். பணம் கொடுத்துவிட்டு போ என்று சொன்னபோது நான் ஞாயிற்றுக்கிழமை சென்றேன். ஆஜர் எதிரி எனக்கு போன் எதுவும் செய்யவில்லை என்றும் 10ம் தேதி அவர் வரச்சொல்லவில்லை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

ELAVARASAN
Digitally signed by ELAVARASAN
Date: 2026.02.24 17:51:13 +0530